### 01. பிள்ளை என்பதன் வரையறை

18 வயதுக்கு குறைந்த நான் ஒரு சிறுவன்/ சிறுமி என்பதை புரிந்து கொண்டிருக்கிறேன். எனது உரிமைகளையும்,கடமைகளையும் தெரிந்து வைத்திருப்பேன். எதனை செய்ய வேண்டும் எதனை தவிர்க்க வேண்டும் என்பதை தெரிந்து கொண்டு அதன்படி நடப்பேன். பிள்ளை என்ற வகையில் எனக்கு பொருத்தமில்லாத விடயங்களை செய்ய மாட்டேன். எல்லா சிறுவர்களும் உரிமைகளை அனுபவிக்க உதவி செய்வேன்.

### 02. பாகுபாடு காட்டாமை

எல்லோரையும் மதிப்பேன். எந்த ஒரு பிள்ளைக்கும் பாகுபாடு காட்ட மாட்டேன். மற்றவர்களின் மொழி, கலாச்சாரம், மதம் என்பவற்றை மதிப்பேன். விசேட தேவையுள்ள பிள்ளைகளைகளுக்கு உதவி செய்து ஊக்குவிப்பேன். எல்லா பிள்ளைகளுக்கும் எல்லா விடயங்களிலும் சம சந்தர்ப்பம் கிடைக்க உதவுவேன்.

### 03. பிள்ளைகளின் சிறந்தநலன்

பிள்ளைகளுக்கு பொருந்தாத எந்த விடயத்தையும் செய்யமாட்டேன். தீர்மானங்கள் எடுக்கும் போது பெற்றார், ஆசிரியர் மற்றும் பொருத்தமான வளர்ந்தவர்களிடம் ஆலோசனை பெறுவேன்.

### 04. சமவாயத்தை அமுலாக்கல்

பிள்ளைகளின் நலனுக்காக அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் சேவைகளை தெரிந்து வைத்திருப்பேன். அவற்றை பயன்படுத்துவேன்

### 05. பெற்றோரின் வழிகாட்டலும் பிள்ளையின் வளர்ச்சியும்

பெற்றோரை மதித்து அவர்களுக்கு கீழ்படிவேன். எனது குடும்பத்திற்கு சமூகத்தில் நல்ல பெயர் பெற்றுத் தருவேன். எனது பெற்றோர் எனக்காக செய்கின்ற தியாகங்கள், அர்பணிப்புக்களை மதிப்பேன்.

### 06. உய்வும் மேம்பாடும்

சுத்தமாக இருந்து நோயிலிருந்து என்னை பாதுகாத்துக் கொள்வேன். போசாக்கான உணவையே உண்பேன். சுகாதாரமற்ற உணவுகளை கடைகளில் வாங்கி சாப்பிடமாட்டேன். உணவை வீணாக்க மாட்டேன் வீதி ஒழுங்குகளை கவனமாக கடைபிடிப்பேன். வாகனங்களில் மிதிபலகையில் பயணம் செய்யமாட்டேன். அறிமுகமில்லாத இடங்களில் குளிக்கவோ நீந்தவோ செல்லமாட்டேன்.



### 07. பெயரும் தேசியமும்

எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை பாதுகாப்பதுடன் எல்லா சான்றிதழ்களையும் கவனமாக கோவைப்படுத்தி வைப்பேன். மற்றவர்களுக்கு பட்டப் பெயர் சூட்டமாட்டேன். அவர்களை கேவலப்படுத்த மாட்டேன். எல்லா தேசியங்களும், இனங்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என ஏற்றுக்கொள்கிறேன்.

### 08. ஆளடையாளம் பேணல்

என்னுடையதும், மற்றவர்களுடையதும் தனித்துவத்தை மதித்து பேணுவேன். உரிய காலத்தில் அடையாள அட்டையை பெற்றுக் கொள்வேன்.

### 09. பெற்றோரைப் பிரிதல்



பெற்றாருக்கு உதவி செய்வேன் அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பேன். பெற்றாரின் தீய பழக்கங்களுக்கு உதவி செய்ய மாட்டேன். அவர்கள் மத்தியில் சமாதானம் நிலவ உதவி செய்வேன். பெற்றாருக்காக இறைவனிடம் பிராத்தனை செய்வேன். அவர்கள் என்னுடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எனது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவேன். எனது வேலைகளை நானே செய்து கொள்வேன்.

### 10. பிரிந்த குடும்பம் இணைதல்

பெற்றாரின் அனுமதியின்றி வெளியிடங்களுக்கு செல்ல மாட்டேன். பெற்றார் சகோதரர், உறவினர்களோடு அன்புடன் நடந்து கொள்வேன்.

### 11. பிள்ளைகளின் சட்டவிரோத மாற்றமும் மீளாமையும்

நான் கடத்தி செல்லப்படுதலில் இருந்து என்னை பாதுகாத்துக் கொள்வேன். அறிமுகம் இல்லாதவர்களோடு தொடர்பு கொள்வதையும், அறிமுகமில்லாதவர்களின் வாகனங்களில் ஏறுவதையும் கட்டாயமாக தவிர்த்துக் கொள்வேன்.

### 12. பிள்ளையின் கருத்து

பெற்றாரின் கருத்தையும் ஆலோசனையையும் மதித்து நடப்பேன். மற்றவர்களின் கருத்துகயையும் மதிப்பேன். உண்மை பேசுவேன். தூஷண வார்த்தைகளை பேச மாட்டேன். என்னை பாதிக்கும் எந்த விடயம் அல்லது தீர்மானம் குறித்தும் கருத்து சொல்ல எனக்கு பொறுப்பு உண்டு என்பதை உணர்கிறேன்.

### 13. கருத்துச் சுதந்திரம்



மற்றவர்கள் கருத்து சொல்லும் போது கவனமாக கேட்பேன். சிறுவர் கழக கூட்டங்களில் கலந்து கொண்டு கருத்து தெரிவிப்பேன். எனதுகருத்தை தெரிவிக்க வேண்டிய இடத்தில் கண்ணியமான முறையில் தெரிவிப்பேன்.

### 14. சிந்தனை, மனசாட்சி, மத வழிபாட்டுச் சுதந்திரம்.

எல்லாவற்றையும் பற்றி சுயமாக சிந்தித்து பெற்றோர்கள் வளர்ந்தவர்களின் ஆலாசனையுடனும் வழிகாட்டலுடனும் முடிவுகள் செய்வேன். மூடநம்பிக்கைகளை பின்பற்றமாட்டேன். என்னுடைய மதத்தை முறையாக பின்பற்றுவேன். தினமும் காலையிலும் மாலையிலும் இறைவனை வணங்குவேன். பொய் சொல்ல மாட்டேன். களவு செய்ய மாட்டேன்.பெற்றாரை ஏமாற்ற மாட்டேன்.

### 15. கூடும் சுதந்திரம்

சிறுவர் கழகத்திற்கு முறையாக செல்வேன். பாடசாலையில் போட்டிகள், கழகங்களில் கலந்து கொள்வேன். என்னை தவறாக வழிநடத்தக்கூடிய நண்பர்களுடன் சேரமாட்டேன்.

### 16. அந்தரங்கத்தைப் பேணல்

முறையாக உடுத்துவேன். உடை மாற்றுதல், குளித்தல் என்பவற்றின் போது எனது அந்தரங்கத்தை பேணுவேன். எனது உடலை மற்றவர்கள் அநாவசியமாக தொட அனுமதிக்க மாட்டேன். எனது புத்தகங்களையும் உடைகளையும் ஒழுங்காக வைத்திருப்பேன். மற்றவர்களின் பொருட்களை அவர்கள் அனுமதியின்றி எடுக்கமாட்டேன். கடிதங்கள் அனுப்பும் போதும் பெறும் போதும் பெற்றோருக்கு அறிவிப்பேன்.

### 17. பொருத்தமானதகவல்களைபெறல்

தொலைகாட்சி பார்ப்பதற்கு பொருத்தமான நேரத்தை ஒதுக்குவேன். தொலைகாட்சியில் பொருத்தமான நிகழ்ச்சிகளை மட்டும் பார்பேன். படிக்கும் நேரத்தில் தொலைகாட்சி பார்ப்பதை தவிர்த்துக் கொள்வேன் செய்தி பார்ப்பேன் பத்திரிக்கை வாசிப்பேன். தினமும் நல்ல புத்தகங்களை வாசிப்பேன். சிறுவருக்கு பொருத்தமில்லாத காட்சிகளை பார்ப்பதை தவிர்த்துக் கொள்வேன். அநாவசியமாக கையடக்க தொலைபேசி பயன்படுத்த மாட்டேன். முகப்புத்தகம், இணையம் போன்றவற்றை பயன்படுத்தும் போது கவனமாக இருப்பேன். வீட்டில் டிஸ்க் என்டனா பயன்படுத்துவதை தவிர்க்குமாறு பெற்றாருக்கு கூறுவேன்.

### 18. பெற்றோரின் கடப்பாடுகள்

பெற்றாரின் வழிகாட்டலின்படி நடப்பேன். பெற்றார் மத்தியில் சமாதானம் நிலவ உதவி செய்வேன். பெற்றோர் இருவருக்கும் என்னால் ஆன உதவிகளை செய்வேன்.

### 19. இம்சை, புறக்கணிப்பு ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பு

மற்ற பிள்ளைகளுக்கு அன்பு செய்வேன். மற்றவர்களை இம்சை படுத்த மாட்டேன். மற்றவர்கள் மனம் புண்படும்படி பேச மாட்டேன். மற்றவர்களுக்கு காயங்கள் ஏற்படுத்தும் அல்லது ஆபத்து ஏற்படுத்தும் விடயங்களை செய்ய மாட்டேன் கழக கூட்டங்களிலும் மற்ற செயற்பாடுகளிலும் எல்லாருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் படி நடந்து கொள்வேன். கோல் சொல்ல மாட்டேன்.

### 20. குடும்பங்களற்ற பிள்ளைகளின் பாதுகாப்பு

எனது குடும்பத்தின் நற்பெயரை பாதுகாப்பேன். குடும்ப நன்மைக்கான விடயங்களை செய்வேன். எனது பாதுகாவலர்களுக்கு நன்றி விசுவாசம் உடையவராக இருப்பேன்.

### 21. தத்தெடுத்தல்

பெற்றார்கள் இல்லாத பிள்ளைகளுக்கு அன்பும் ஆதரவும் காட்டுவேன். எனது பெற்றாரின் பாதுகாப்பு முக்கியம் என உணர்கிறேன்.

### 22. அகதிப் பிள்ளைகள்

பெற்றாரை பிரிந்து வாழும் அல்லது பெற்றார் இல்லாத பிள்ளைகளை மதிப்பேன் அன்பு காட்டுவேன், உதவி செய்வேன். எனது பெற்றாரின் பாதுகாப்பை மதிப்பேன்.

### 23. விசேட தேவையுள்ள பிள்ளைகள்

ஆபத்தான அல்லது பாதுகாப்பில்லாத விடயங்களில் ஈடுபடமாட்டேன். எனது உடல் உறுப்புக்களை பாதுகாத்துக் கொள்வேன். விசேட தேவையுள்ள பிள்ளைகளின் மனம் நோகும் எந்த காரியத்தையும் செய்யமாட்டேன், பேச மாட்டேன். விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு உதவி செய்து ஊக்குவிப்பேன். அவர்களின் பிள்ளைகளில் உரிமையை பாதுகாப்பேன்.

### 24. சுகாதாரமும் சுகாதாரசேவைகளும்

சுத்தமாக இருப்பேன். நோயில் இருந்து என்னை பாதுகாத்துக் கொள்வேன். போசாக்கான உணவை உண்பேன். உணவை வீணாக்க மாட்டேன். சுகாதாரமற்ற உணவுகளை கடையில் வாங்கி சாப்பிட மாட்டேன். வீட்டையும் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக பேணுவேன். சூழலை பாதுகாப்பேன்.



### 25. காலத்துக்குகாலம் பரிசீலித்தல்

எனக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கும் இடம் தொடர்பாக நன்றாக புரிந்து கொள்ளுவேன். அவ்விடம் எனக்கு பொருத்தமற்றதாக இருப்பின் அது பற்றி வளர்ந்தவர்களுக்கு அல்லது அதிகாரிகளுக்கு தெரிவிப்பேன்.

**26. சமூக பாதுகாப்பு**

வீதி ஒழுங்களை கவனமாக கடைப்பிடிப்பேன். பிள்ளைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் (மின்கம்பம், உடைந்தபாலம்) என்பவை தொடர்பாக பெற்றாரினதும் அதிகாரிகளினதும் கவனத்துக்கு கொண்டு வருவேன். சிறுவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் உதவிகள் குறித்து அறிந்து கொள்வேன். தகுதியுள்ளவர்களுக்கு அவற்றை பெற்றுக் கொடுக்க வளர்ந்தவர்களோடு சேர்ந்து ஒத்துழைப்பேன். சமூக பாதுகாப்பு தொடர்பான வியடங்களை அறிந்து கொண்டு அவற்றை பயன்படுத்துவதோடு மற்ற பிள்ளைகளுக்கும் அறியத்தருவேன். பொது சொத்துக்களை பாதுகாப்பேன்.

**27. வாழ்கைத்தரம்**

எனக்கு கிடைக்கும் வளங்களை சரியாக பயப்படுத்துவேன். வளங்களை வீணாக்க மாட்டேன். மின்சாரம் நீர் என்பவற்றை கவனமாக பயன்படுத்துவேன். சூழலை பாதுகாப்பேன். புத்தகங்கள், பாடசாலையில் உள்ள வளங்களை கவனமாக பயன்படுத்துவேன். பாதுகாப்பேன்.

**28. கல்வி**

எனது கல்விக்கு முதலிடம் வழங்குவேன். காலையில் எழுந்து படிப்பேன். நாளாந்த வேலைகளை நேரசூசி அமைத்து செய்வேன். விடுமுறை நாட்களை பயனுள்ள முறையில் கழிப்பேன். ஒவ்வொரு முறையும் அதிக புள்ளிகளை எடுக்கும் நோக்கத்துடன் சிலந்தி வலை, கண்காணிப்பு அட்டை என கல்வியை மேம்படுத்த சுயமாக கற்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வேன். எனது எதிர்கால கல்வி அபிவிருத்தி குறித்து பொறுப்பானவர்களிடம் பேசிவழிகாட்டல் பெறுவேன். முடியுமானவரை பெற்றாரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவேன்.

**29. கல்வியின் நோக்கங்கள்**

கல்வியோடு எனது விழுமியங்களை மேம்டுபடுத்தும் அறிவை பெற்றக்கொள்வேன். பரீட்சைகளில் சித்தியடைய முழு முயற்சிசெய்வேன்.

**30. சிறுபான்மையினரின் பிள்ளைகள்**

எனது மொழி. கலாசாரம்,மதம் என்பவற்றை மதிப்பது போன்று மற்றவர்களுடைய மொழி, மதம், கலாச்சாரத்தை மதிப்பேன். சிறுபான்மை சிறுவர்களுக்கு பாகுபாடு காட்டப்படும் போது அல்லது அநீதி இழைக்கப்படும் போது அதனை எதிர்த்து குரல் கொடுப்பேன்.

**31. ஓய்வு, பொழுது போக்கு மற்றும் கலாச்சார நடவடிக்கைகள்**

விளையாட்டில் விதிகளை கடைப்பிடிப்பேன். விளையாட்டுகளை தொலைகாட்சியில் பார்க்க முழு நேரத்தையும் செலவிடமாட்டேன். தோட்டத்தில் பிள்ளைகளுக்கு விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா என்பவற்றை பெற்றுக் கொள்ள முயற்சி செய்வேன். குத்துச் சண்டை மற்றும் பொருத்தமில்லாத படங்கள், வீடியோக்கள் பார்ப்பதை தவிர்த்துக் கொள்வேன். தொலைகாட்சியில் அதிக நேரத்தை செலவிட மாட்டேன்.



**32. சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல்**



எந்தக் காரணம் கொண்டும் வெளியிடங்களில வேலைக்கு செல்ல மாட்டேன். வேறு பிள்ளைகள் வேலைக்கு அமர்தப்படுவதை தவிர்க்க என்னால் ஆனதை செய்வேன். எனது கல்விக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வீட்டு வேலைகளில் பெற்றாருக்கு உதவி செய்வேன். சிறிய வருமானமீட்டல் முயற்சிகளில் ஈடுபடுவேன். மேலதிக பணம் பெறுவதற்காக சம்பளத்திற்காக வெளி வேலைகளுக்கு செல்ல மாட்டேன்.

**33. போதைப்பொருட் துஷ்பிரயோகம்**

எந்தக் காரணம் கொண்டும் எந்தவித போதைப் பொருளையும் பயன்படுத்தமாட்டேன். வளர்ந்தவர்களுக்காக போதைப் பொருள், பீடி,சிகரட், மது என்பவற்றை வாங்கி வர இணங்க மாட்டேன். போதை பொருள் விநியோகம் பற்றி தெரிந்தால் பொறுப்பானவர்களிடம் தெரிவிப்பேன்.

**34. பாலியல் வாரியான சுரண்டல்**

எனது உடலை அந்நியர் எவரும் தொட அனுமதிக்க மாட்டேன். வீட்டிலோ களில் ஈடுபடுத்தவோ, ஆபாசப்படம் அல்லது காட்சிகளை பார்க்க வைத்தால் அல்லது தவறான காரியங்களில் ஈடுபடுத்த முயற்சி செய்தால் பயமுறுத்தினால், அல்லது தூண்டினால் அதற்கு மறுப்பு தெரிவிப்பேன். அது குறித்து எனது பெற்றார்களிடம் அல்லது பொறுப்பானவர்களிடம் சொல்லுவேன்.

**35. விற்பனை, பரிவர்த்தனை, கடத்தல்**

வீட்டிலோ மற்ற இடங்களிலோ தனியாக இருப்பதை அல்லது அறிமுகமில்லாத இடங்களுக்கு பயணம் செய்வதை தவிர்த்துக் கொள்வேன். அறிமுகமில்லாதவர்கள், அல்லது நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்லாதவர்களுடைய வாகனங்களில் ஏற மாட்டேன். அவர்களிடம் இருந்துஉணவு பண்டங்கள் அல்லது பானங்களை பெற்றுக் கொள்ள மாட்டேன்.

**36. வேறுவிகையான சுரண்டல்கள்**

தொலைக்காட்சி மற்றும் விளம்பரங்களில் என்னை விளம்பரப் பொருளாக பயன்படுத்த அனுமதிக்கமாட்டேன்.

**37. சித்திரவதையும் சதந்திரத்தைப் பறித்தலும்**

நான் எல்லா பிள்ளைகளோடு அன்போடும் கருணையோடும் நடந்து கொள்வேன். நான் எனது பெற்றார்கள், ஆசிரியர்கள், வளர்ந்தவர்கள் ஆகியோர் என்னை தண்டிக்க வேண்டிய தேவை ஏற்படாத வகையில் நடந்து கொள்வேன். மற்ற பிள்ளைகளை உடல் ரீதியாககோ உடல் ரீதியாகவே, சித்திரவதை செய்ய மாட்டேன். பிள்ளைகள சித்திரவதை செய்யப்படுவது, அல்லது குரூர தண்டனைக்க உட்படுத்தப்படுவதை அறிந்தால் அதை தடுக்க என்னால் ஆனதை செய்வேன். அவசியமானால் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருவேன். எப்போதும் நாட்டின் சட்டத்திற்கு அமைவாக நடப்பேன். சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விழுமியங்களை மதித்து ஒழுகுவேன்.

**38. ஆயுத பிணக்குகள்**

வளர்ந்தவர்களிடையே நடைபெறும் பிணக்குகளில் நான் தலையிட மாட்டேன். என்னுடையதும் மற்றவர்களினதும் உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய எந்தவொரு உபகரணத்தையும் பயன்படுத்த மாட்டேன்.

**39. புனர்வாழ்வு பராமரிப்பு**

நான் அனுமதியோடும் வளர்ந்தவர்களின் வழிகாட்டலோடும் சிறுவர் இல்லங்களை பார்வையிட்டு அங்குள்ள சிறுவர்களுடனான என்னுடைய ஐக்கியத்தை தெரிவிப்பேன்.

**40. சிறுவரின் சட்டமும்**

நான் நாட்டின் சட்டத்தை மதிப்பேன். நான் சட்டத்தை மதிக்கும் பிரஜையாக வளர்வேன். சட்டம் மீறப்படும் போது அல்லது சட்டம் மீறப்படும் அபாயம் உள்ள போது அது குறித்து பெற்றாருக்கும், வளர்ந்தவர்களுக்கும் அறிவிப்பேன்.

**41. உயர்வான தரங்களை மதித்தல்**

பிள்ளைகளாகிய எங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள், தீர்மானங்கள், மற்றும் வேலைத்திட்டங்கள் பிள்ளைகளாகிய எங்களின் உயரிய நலனுக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என குரல் எழுப்புவேன்.

**42. நடைமுறைப்படுத்தல்**

சிறுவர் உரிமைகளையும், பொறுப்புகளையும் பற்றி அறிந்து கொள்வது எனது கடமை என்பதை நான் உணர்ந்து கொண்டுள்ளேன். அவற்றை என்னுடைய பாடசாலையிலும், சிறுவர் கழகங்களிலும் உள்ள ஏனைய பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பது என்னுடைய பொறுப்பாகும். சிறுவர் உரிமை, பொறுப்புகள் தொடர்பாக எனது பெற்றோர், வளர்ந்தவர்கள் உள்ளிட்ட சமூகத்தினரை அறிவூட்டுவதற்கு என்னிடம் காணப்படும் எல்லா திறமைகளையும் உத்திகளையும் பயன்படுத்துவேன்.


Tel: 081-2223528
Fax: 081-2217128
Email: epessd@yahoo.com

Tel: 011-2778911 / 4
Fax: 011-2778915
Email: ncpa@childprotection.gov.lk

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA
Tel: 052-2222535
Fax: 052-2222789
Email: www.soscvsrilanka.org

Tel: 052-2222535
Fax: 052-2222789
Email: predo@sltnet.lk


# பொறுப்புகளை நிறைவேற்றி உரிமைகளை அனுபவிப்பேன

